தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். ஏ. சோமசுந்தரம் Ph.D.,
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 28-6-2017

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## வேளாண் பல்கலையில் விஞ்ஞானிகள் மற்றும் விவசாயிகளுக்கு மருந்து மற்றும் மணமூட்டும் பயிர்கள் பற்றிய பயிற்சி

இந்தியாவின், கிராமப்புற மக்களுடைய சமூக, பொருளாதார, ஆன்மீக மற்றும் மருத்துவத்தில், மருத்துவத் தாவரங்கள் ஒரு முக்கியமான இடத்தை பெற்றுள்ளது. இயற்கை மருத்துவ தயாரிப்புகள், எந்தவொரு பக்க விளைவு இல்லாமையினாலும், எளிதில் மற்றும் மலிவான விலையில் இடைக்கப் பெறுவதாலும், வளர்ந்து வரும் மற்றும் வளரும் நாடுகளில் இவற்றின் தேவை மிகுந்துள்ளது. உடல் வளம் மற்றும் நோய் மேலாண்மையில் மருந்து தாவரங்கள் உலகளவில் மிக முக்கியப் பங்காற்றுகின்றன. மருந்து மற்றும் மணமூட்டும் பயிர்கள் ஆராய்ச்சி இயக்ககம், குஜராத் மற்றும் கோவை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், மருந்து மற்றும் மணமூட்டும் பயிர்கள் துறை இணைந்து அறிவியல் வல்லுனர்கள் மற்றும் விவசாயிகளுக்காக, ''மருந்து மற்றும் மணமூட்டும் பயிர்களின் பாதுகாப்பு, சாகுபடி மற்றும் அறுவடைக்கு பிந்திய தொழில்நுட்பங்கள்'' குறித்த மூன்று நாள் (ஜீன் 28-30 வரை) பயிற்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இப்பயிற்சியானது விவசாயிகளுக்கு பயன்தரவல்ல, புதிய சாகுபடி தொழில்நுட்பங்கள் புதிய இரகங்கள், சந்தைப்படுத்தல் மற்றும் அறுவடைக்குப் பின் சார்ந்த தொழில்நுட்பங்கள் குறித்த விழிப்புணர்வினை ஏற்படுத்தும் நோக்கினை அடிப்படையாகக் கொண்டது. இப்பயிற்சியில், இந்தியா மற்றும் தமிழ்நாட்டிலுள்ள பல்வேறு வேளாண்மைப் பல்கலைக்கழக அறிவியல் வல்லுனர்கள் மற்றும் விவசாயிகள் கலந்து கொள்கின்றனர். இப்பயிற்சியில் மருந்துப் பயிர்கள் பாதுகாப்பு, சாகுபடி முறைகள், புதிய இரகங்கள், உயிரியில் சார்ந்த நோய் மற்றும் பூச்சி பாதுகாப்பு தொழில்நுட்பங்கள் விவரிக்கப்பட உள்ளது.

இப்பயிற்சியின், துவக்க விழாவில், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர். கு. ராமசாமி அவர்கள் மாநிலத்தில் மருந்துப்பயிர்கள் வளர்ச்சி மற்றும் தற்போதைய நிலவரம் குறித்த தலைமையுரை ஆற்றினார். மேலும், மருந்துப் பயிர்களுக்கான உற்பத்தி மற்றும் வணிகத்தில் கூட்டுறவு முயற்சி உருவாக வேண்டும் என்பதை வலியுறுத்தினார்.

முனைவர். ப. மணிவேல், இயக்குனர் மருந்து மற்றும் மணமூட்டும் பயிர்கள் இயக்ககம், குஜராத் மற்றும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக ஆராய்ச்சி இயக்குனர் முனைவர். ம. மகேஷ்வரன், தோட்டக்கலை முதன்மையர் முனைவர். ம. ஜவஹர்லால் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். முனைவர். ர.நாகராஜ் ரெட்டி அறிவியல் வல்லுனர் மருந்து மற்றும் மணமூட்டும் பயிர்கள் இயக்குனரகம், குஜராத், நன்றியுரை ஆற்றினார்.

விழாவில் மருந்துப் பயிர் சாகுபடி முன்னோடி விவசாயி ஒட்டன்சத்திரம், கப்பல்பட்டியைச் சேர்ந்த திரு. தமிழரசன் கௌரவிக்கப்பட்டார்.

மக்கள் தொடர்பு அலுவலர்